# மான்மின் செய்திகள்
# Manmin News


Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## பரிசுத்த வேதாகம கிரியைகள், சுகமாகுதலின் கிரியைகள் மற்றும் ஆவிக்குரிய உலகத்தை மூவான் மதுர தண்ணீர் இடத்தை பார்த்தவர்கள் அனுபவித்தனர்



யாத்திராகமம் 15வது அதிகாரத்தில் மோசே மாரா என்ற இடத்தில் ஒரு மரத்தை கசப்பு தண்ணீரில் போட்டபொழுது, அது மதுரமான தண்ணீராக மாறியது. மார்ச், 2000ம் ஆண்டில் மூவான், ஜீயோனாத்திலுள்ள மூவான் மான்மின் சபைக்கு முன்னே இருக்கின்ற கடல் தண்ணீரானது தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் காலத்தையும் இடத்தையும் கடந்துச் செயல்படும் ஜெபத்தினால் மதுர தண்ணீராக மாறியது; அதை மக்கள் பருகி, தெளித்து மற்றும் விசுவாசத்தோடு அதில் மூழ்கி எழும்பொழுது ஆசீர்வாதம், சுகம், பதில் போன்ற கிரியைகளை அனுபவிக்கின்றனர்.

2016 மான்மின் கோடை முகாமிற்கு முப்பது நாடுகளிலிருந்து ஏறக்குறைய 1,000 போதகர்களும் விசுவாசிகளும் வந்தனர். ஆகஸ்டு 11ம் தேதி அவர்கள் மூவானில் உள்ள ஜீயோனாம் பகுதியில் உள்ள மூவான் மதுர தண்ணீர் இடத்திற்குச் சென்றனர். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தின் வாயிலாக மூவான் மான்மின் சபைக்கு முன்னே இருக்கின்ற உப்பான கடல் தண்ணீரானது மதுரமான குடிதண்ணீராக மாறிய காரணத்தால் அந்த இடத்திற்கு கொரியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து அநேக மக்கள் வருகை புரிகின்றனர்.

அவர்களுடைய இருதயங்களின் ஆசைகள் தேவனுடைய வல்லமையால் நிறைவேறும்படிக்கு, தங்களது இருதயங்களின் ஆசைகளோடு ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மூவான் மதுர தண்ணீரில் மூழ்கி எழுந்தனர்.

சிங்கப்பூரிலிருந்து வந்த 42 வயதான சகோதரி வாங் ஷியா பிங் சொன்னதாவது, “கடந்த 5 வருடங்களாக நான் தலைவலியால் அவதிப்பட்டு வந்தேன். தூரப்பார்வையின்நிமித்தம் என்னால் அருகாமையில் உள்ள எழுத்துக்களை வாசிக்க முடியாமல் போனது. நான் மூவான் மதுர தண்ணீர் குளத்தில் மூழ்கி எழுந்தபிறகு, நான் தலை வலியிலிருந்து விடுதலையானேன்; நல்லப் பார்வைத்திறனையும் பெற்றுக்கொண்டேன்.”

நேபாளிலிருந்து வந்த 43 வயதாகும் கண்காணி க்யன் பகதூர் ராஜ் பத்து வருடங்களாக மூட்டு வலியினால் அவதிப்பட்டு வந்தார். அவர் சொன்னது, “என்னுடைய இடது மூட்டில் முடக்குவாதம் இருந்ததால், அது எப்பொழுதும் வீக்கத்தோடு வலிமிகுந்ததாய் இருக்கும். நடப்பதே எனக்குச் சிரமமாய் இருக்கும். 2016 மான்மின் கோடை முகாமில் வியாதியஸ்தர்களுக்கான ஜெப நேரத்தில் நான் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்ற பொழுது, வலி நீங்கிப்போனது. நான் மூவான் மதுர தண்ணீரில் மூழ்கியெழுந்த பிறகு வீக்கமானது முற்றிலும் குறைந்தது, நான் மிகவும் சௌகரியமாக உணர்ந்தேன். பத்தாண்டு அவதிக்குப் பிறகு இப்பொழுது என்னுடைய கால்களில் இலகுவை உணருகிறேன்.”

உக்ரைனைச் சேர்ந்த 41 வயதாகும் சகோதரர் அன்டோன் தேகு சிஷே, இரத்த ஓட்ட கோளா றிலிருந்தும், அவருடைய மனைவியான சகோதரி ஏஞ்சலா ஒக்குமா சுருள்சிரை நாளத்திலிருந்தும் சுகமானார்கள் (4ம் பக்கத்தில் சாட்சி). அநேக மக்களும்கூட வலி மற்றும் மலச்சிக்கல், பாதப்படை, மூல நோய் உட்பட பல்வேறு வியாதிகளிலிருந்து சுகமானார்கள்.

மூவான் மதுர தண்ணீர் தோட்டத்தில் போதகர் சங்ஷில் லீயின் வழிநடத்துதலின்படி, அவர்கள் ஆவிக்குரிய உலகத்தை அனுபவித்தனர். இந்தியாவிலிருந்து வந்த 29 வயதாகும் போதகர் பெர்சியாள் இராஜதுரை, “கர்த்தருடைய கிருபையால் நான் மையத்தில் சூரியன் இருக்கும்படி ஒரு சிலுவையையும், ஐந்து இதழ்களையும் பார்த்தேன். நான் தேவ பிரசன்னத்தை உணர்ந்தேன்; என்னைச் சுற்றிலும் தூதர்களை கண்டது மிகுந்த சந்தோஷமளிக்கிறது” என்று சொன்னார்.

மலேசியாவிலிருந்து வந்த போதகர் சாரா லாவு கிங் தோ வயது, 40, ஒரு தூதனுடைய சிறகுகளைப் பார்த்தார்; சிங்கப்பூரிலிருந்து வந்த சகோதரர் க்வாங்கன், வயது 12, ஆகாயத்தில் சிலுவையையும், தங்கம் மற்றும் வெள்ளித் தூளையும் பார்த்தான். அநேக மக்கள் தூதர்களின் அழகான வண்ணமயமான ஒளிகளையும் கண்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளினால் தேவனுடைய கிருபையினால் நிரப்பப்பட்டனர்.

### “என்னுடைய வலது கையை என் தலைக்குமேல் உயர்த்த முடிகிறது!”

**சகோதரி ஜோஸ்பின் வி. கிராமி, வயது 68, தாவோ மான்மின் சபை, பிலிப்பைன்ஸ்**



நான் சவுதி அரேபியாவில் 20 ஆண்டுகளாக செவிலியராக பணிபுரிந்தேன். மிகுதியான வேலையின் நிமித்தம் என் வலது தோள்பட்டையின் குருத்தெலும்பு தேய்ந்து போனது; நான் மிகுந்த வலியில் இருந்தேன். எவ்வளவுதான் மருந்துகளையும், உடல் சிகிச்சை களையும் நான் எடுத்துக்கொண்டாலும் அவை சற்றே வேலைச் செய்யும், பிறகு மீண்டும் வலி வந்து விடும். என்னுடைய வலது கையை என் தலைக்கு மேலாக என்னால் உயர்த்த முடியாமல் இருந்தேன்.

இதற்கிடையில், 2016 மான்மின் கோடை முகாமிற்காக நான் கொரியாவிற்குச் சென்றேன். ஆகஸ்டு 3ம் தேதி நான் மான்மின் ஜெபமையத்தின் கூட்டத்தில் பங்குபெற்று, அதன் தலைவி போக்னிம் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். என்னுடைய தோள்பட்டை வலி குறைந்தது, என் கைகளையும் என்னால் உயர்த்த முடிந்தது. ஆகஸ்டு 8ம் தேதி, நான் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வியாதியஸ்தர் களுக்கான ஜெபத்தை முதல் நாள் இரவு தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் பெற்றுக்கொண்டேன். அப்பொழுது என் வலி முற்றிலும் நீங்கிப்போனது; 20 ஆண்டுகளுக்குப் பிறகு என் வலது கைகயை என்னால் நன்றாக அசைக்க முடிகின்றது.

# உண்மையான விசுவாசம் கொண்டிருப்பதின் நிரூபணம்



**தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ**

“என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13).

விசுவாசம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட சிலாக்கியம். மனுஷருடைய வல்லமையாலும் செய்யப்பட முடியாத காரியங்களும் கூட ஆவிக்குரிய விசுவாசத்தால் சாத்தியப்பட வைக்கக்கூடும். ஆவிக்குரிய விசுவாசத்தில் கூடாதது ஏதும் இல்லை அது பொக்கிஷம் போல் உள்ளது. அப்படியானால், உண்மையான விசுவாசம் கொண்டிருப்பதின் நிரூபணம் என்ன?

### 1. முதலாவது, இது முழு நம்பிக்கை

ஏதாவது உங்கள் எண்ணங்களோடும் ஆர்வங்களோடும் ஒத்துப்போகும்போது மட்டுமே நீங்கள் விசுவாசித்தால், அது முழு நம்பிக்கை அல்ல. காலம் செல்லச் செல்ல அல்லது வித்தியாசமான சூழ்நிலையிலும் நம்பிக்கை ஒருபோதும் மாறாது. நம்பிக்கை இருந்தபடியால் பேதுரு சீஷர்களிலெல்லாம் பிரதான சீஷராய் மாறினார்.

இராமுழுவதும் பேதுரு ஒரு மீனைக் கூடப் பிடிக்கவில்லை. அவன் சோர்ந்து போயிருந்தான். இயேசுவானவர் அவனிடம், “ஆழத்தில் போய் வலையைப் போடு” என்றார். இயேசுவானவர் சொன்னபடியே அவன் செய்தான். அதனால் அவன் பிறரை உதவிக்கு கூப்பிடும் அளவிற்கு அநேக மீன்கள் வலையில் பிடிபட்டன (லூக்கா 5:3–7).

அந்த நேரத்திலிருந்து, பேதுரு இயேசுவோடு தங்கினான். அவரில் இருந்த அவனது நம்பிக்கை அதிகரித்தது. இறுதியாக, அவன் ஆழமான நம்பிக்கை அறிக்கை செய்யவும் முடிந்தது. “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்” (மத்தேயு 16:16). பேதுருவுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை இருந்தபடியால், முக்கிய கணப்பொழுதுகளில் இயேசுவானவர் பேதுருவோடு இருந்தார். அவன் பல கிரியைகளோடுகூட அவரை நம்பினான்.

இயேசுவானவரும்கூட ஒருமுறை அவனிடம் அவன் ஒரு மீனைப் பிடித்தால், அவன் ஒரு பணத்தைப் பெறுவான், அதை வைத்து அவன் வரிப்பணத்தை செலுத்துவான் என்றார். கூடவே, அவர் தண்ணீர் குடம் சுமந்து செல்லுகிற ஒருவனைக் கண்டு அவன் நுழைகிற வீட்டுக்கு அவனைப் பின் தொடர்ந்து அவனிடம் இரவு உணவுக்காக ஆயத்தம்பண்ணும்படி சொல்லச் சொன்னார். இப்படிப்பட்ட விநோதமான காரியங்களை இயேசு அவனைச் செய்யச் சொல்லியிருந்தாலும் பேதுரு அவைகளை சந்தேகிக்கவே இல்லை.

“மீனின் வாயில் எப்படி பணம் இருக்கும்? என்னால் மீனைப் பிடிக்க முடியாவிட்டால் என்ன செய்வது?... சரியான கணப்பொழுதில் தண்ணீர் குடம் சுமந்து வருகிற மனிதன் என்னைக் கடந்து செல்வானா?” பேதுரு இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்டு அதற்கு விளக்கங்களை கேட்க முற்பட்டிருப்பானேயானால் அது இயேசுவானவருக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கக்கூடும்! அல்லது அவர் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்காவிட்டாலும் அவனுக்கு அசௌகரிய உணர்வு இருந்து, ஏன் இயேசுவானவர் அவனை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யச் சொல்லுகிறார் என்று அவன் சந்தேகப்பட்டிருந்தால், முதலிடத்தில் இயேசுவானவர் அவனுக்கு எந்த ஒரு வேலையும் கொடுத்திருக்கவே மாட்டார்.

உண்மையில், அச்சமயத்தில் பேதுரு விசுவாசத்தின் பூரண அளவை இன்னும் அடையவில்லை. ஆனால் இயேசுவின் வல்லமையான கிரியைகளைக் கண்டு அவருடைய வார்த்தைகளின் அதிகாரத்தை அனுபவிப்பதன்மூலம், பேதுரு இயேசுவை அறிந்துணர்ந்து நம்பினான். பிற்பாடு, அவன் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின் அவனுடைய நம்பிக்கை மிக ஆழமாக, அவன் இரத்தசாட்சியாக மரிக்கும் நிலை அடையும் வரைக்கும் அவன் தன் ஜீவியத்தை அர்ப்பணித்தான்.

முந்தைய ஏழு ஆண்டுகளாக என்னைப் பாதித்த எல்லா வியாதிகளிலிருந்தும் நான் சுகம் பெற்ற பின்னர் அந்த நாளிலிருந்து நான் தேவனுடைய எந்த ஒரு வார்த்தையையும் அப்படியே விசுவாசித்தேன். இந்தத் திருச்சபையின் அனைத்து ஊழியங்களும் பரிபூரண நம்பிக்கையால் அடையப் பெற்றவை. தேவன் எதைச் சொன்னாலும் நான் அதை “ஆமென்” என்று அப்படியே ஏற்றுக் கொண்டேன். அது மனிதனுடைய எண்ணங்களால் புரிந்துக்கொள்ள முடியாதது என்றாலும்கூட. 10, 20 மற்றும் 30 ஆண்டுகள் கடந்து சென்றாலும் கூட, அக்கினி போன்ற சோதனைகள் இருந்த போதிலும்கூட நான் தேவனுடைய வார்த்தையை ஒருபோதும் சந்தேகித்ததில்லை. தேவன்தாமே எல்லாவற்றையும் செய்யப்போகிறவராய் இருந்தபடியால் நான் கவலைப்படவே இல்லை.

நீங்கள் முழுமையாக தேவனை நம்புகிறீர்களா? சில மக்கள் சிறிய வியாதிகளுக்காக தேவனை சார்ந்துக் கொள்வார்கள், ஆனால் பெரிய நோய்களுக்கு அல்ல. காரியங்கள் சரியாக நடைபெறவில்லை எனில் சிலர் தேவனுடைய அன்பு அவர்களை விட்டு தூரம் உள்ளது என்று நினைத்து கவலைகளால் நிரம்பி விடுவர்.

இதன் அர்த்தம் அவர்களுக்கு விசுவாசம் இல்லை என்பதாகும். அவர்கள் உண்மையில் தேவனை நம்பினால், அவர்கள் அவரை விசுவாசித்து களிகூர்ந்து எந்த ஒரு சூழ்நிலையிலும் நன்றி செலுத்துகிறவர்களாய் இருப்பர். அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தும் வழியை அறிந்து கொள்ள முயற்சித்து, முன்பைக்காட்டிலும் மிக ஊக்கமாக அவைகளைச் செய்வார்கள். பெரிய காரியமானாலும் சிறிதானாலும் கஷ்ட நேரத்திற்கும் அல்லது நல்ல நேரத்திற்கும், நீங்கள் முழுதுமாய் தேவனை நம்பி விசுவாசத்தின் கிரியைகளை அனுபவிப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

### 2. விசுவாசத்தைக் கொண்டிருப்பதின் நிரூபணம் இரண்டாவதாக, முழுமையான கீழ்ப்படிதல்

உண்மையான விசுவாசம் உங்களுக்கு இருக்குமானால், உண்மையாக நீங்கள் நம்புவீர்களானால், அங்கே கீழ்ப்படிதலின் ஆதாரம் இருக்க வேண்டும். ஆழத்திலே போய் வலையைப் போடு என்று சொல்லப்பட்டபோது (லூக்கா 5:4) பேதுரு கீழ்ப்படியாமல் போயிருந்தால் என்னவாகியிருக்கும்? அவன், “இயேசுவே, உம்மைக் காட்டிலும் எனக்கு மீன் பிடித்தலைப் பற்றி கொஞ்சம் அதிகமாகவே தெரியும் என நான் நினைக்கிறேன், இரவு முழுதும் நான் முயற்சித்தேன். நாம் மறுபடியும் போனாலும் வேலைக்கு ஆகப் போவதில்லை” என்று சொல்லி யிருந்தால் அவன் இயேசுவை நம்பினான் என்று நம்மால் கூற முடியாது.

“இயேசுவே! நீர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன். உம்முடைய வார்த்தை நிறைவேறும். ஆனால் இன்று, நான் மிக களைப்பாக உள்ளேன். ஏற்கனவே வலையையும் கழுவி விட்டேன். உம்முடைய ஆலோசனையை நிச்சயமாக அடுத்த முறை பின்பற்றுவேன்.” இப்பேர்பட்ட மனிதனுக்கு நம்பிக்கை அல்லது விசுவாசம் ஏதும் உள்ளது என நம்மால் சொல்ல முடியுமா? இது திரளான இலைகள் இருந்தும் கனி கொடாத மரம்போல் இருப்பதாகும். உண்மையான விசுவாசத்தின் ஆதாரம் ஏதும் இல்லை. நாம் கீழ்ப்படியும்போது மட்டுமே தேவனுடைய வல்லமையை நம்மால் அனுபவிக்க முடியும்.

உங்களைக் குறித்து என்ன? ஆண்டவரிலும் அவருடைய வல்லமை மூலமாகவும் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று விசுவாசிக்கிறேன் என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் எந்த அளவு உண்மையாக பரிசுத்தமாவதற்கு முயற்சிக்கிறீர்கள். மேலும் எந்தளவு கீழ்ப்படிகிறீர்கள்? இடைவிடாமல் நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ஆவியில் உங்கள் முழு மனதோடு ஜெபிக்கிறீர்களா, உங்கள் சுய ஆசைகளைக் காட்டிலும் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் நீங்கள் தேடுகிறீர்களா? நீங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை செய்து ஒவ்வொரு வாரமும் கேட்ட செய்திகள் அனைத்தையும் உங்கள் மனதில் காத்துக்கொள்கிறீர்களா?

யாராகிலும், “இயேசுவானவர் என்னை மீன் பிடிக்கச் சொன்னால் உடனடியாக கீழ்ப்படிவேன். தலைமை போதகரே நீர் நேரடியாக எனக்குக் கட்டளையிட்டால், நான் எதற்கானாலும் கீழ்ப்படிவேன். நீர் என்னை கடையாந்திரமான இடத்திற்குச் சென்று திருப்பணி செய் என்று கூறினால் நான் கீழ்ப்படிவேன்” என்று நினைக்கிறீர்களா. உங்களால் உண்மையில் அதைச் செய்ய முடியுமானால், ஒவ்வொரு வாரமும் பிரசங்கிக்கப்படுகிற செய்திகள் அனைத்தையும் உங்களுக்குச் சொந்தமாக ஏற்றுக்கொண்டு, அவைகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். அப்போதுதான் தேவனால் உங்களை நம்பமுடியும் கைமாறாக உங்களுக்குப் பெரும் கடமைகளை அவர் கொடுப்பார்.

### 3. உண்மையான விசுவாசம் கொண்டிருப்பதின் நிரூபணம் மூன்றாவதாக, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையுள்ளவர்களாய் இருத்தல்

உண்மையில் நமக்கு விசுவாசம் இருந்தால், நாம் நம்முடைய சிறந்த முயற்சியோடு நம்முடைய கடமைகளை நிறைவேற்றி நிச்சயமாக கனிகளை விளைவிப்போம். திருச்சபையின் தலைவர்கள் விசுவாசத்தில் தேக்க நிலைமைக் கொண்டு தங்களது குழுக்களில் தங்களுக்கான அங்கீகாரத்–தைப் பெறாவிட்டால், அவர்கள் தேவனை நேசிக்கிறார்கள் என்று சொல்வது சற்று அலங்கோலமாய் இருக்கும். அவர்கள் தாங்கள் செய்யவேண்டிய வேலையை மட்டுமே செய்தால், அல்லது அவர்கள் உண்மையில் செய்ய விரும்பாத வேலை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் போது அந்த வேலைக்காக ஒரு பொறுப்பான கரிசனையைக் கொள்ளாவிட்டால் அவர்களுக்கு உண்மையான விசுவாசம் இருக்கிறது என்று சொல்வதற்கு அவர்கள் வெட்கப்படுவார்கள்.

முடிவு காலத்தில் இந்த திருச்சபையின் அநாதி திட்டத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தில் பங்கு பெறுவதென்றால் என்ன? உங்களது சிறு குழுக்களில் அல்லது செல் குழுக்களில் உங்களது கடமைகளில் உண்மையாய் இருக்கும்போது, இது மான்மின் ஊழியத்தில் பங்குப்பெற்று சேர்ந்து மகிமையின் கனியை அனுபவிப்பதாயிருக்கிறது. உங்கள் முழு மனதோடு நீங்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் அது எங்கிருந்தாலும் நிச்சயமாக அதிலிருந்து கனிகள் விளையும்.

மேலும், தேவனில் உண்மையுள்ள நம்பிக்கை உங்களுக்கிருந்தால், நீங்கள் ஒரு பகுதியில் மட்டுமே சாய்ந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் திருச்சபையில் கடினமாக உழைத்து உங்களது வீட்டில் அல்லது வேலை ஸ்தலத்தில் உழைக்காவிட்டால், அப்போது உங்களுக்கு உண்மையான விசுவாசம் இருக்கிறதென்று நாம் கூறமுடியாது. நீங்கள் உங்கள் குடும்பத்தினரை, “மற்ற கணவன்மார்களும், பிள்ளைகளும் நல்ல விசுவாசம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏன் என்னுடையவர்கள் அப்படி இல்லை?” என்று கூறி சலிப்புத் தட்டினால், அதன் அர்த்தம் உங்களுக்க உண்மையான விசுவாசம் இல்லை. முதலாவது நீங்கள் விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு நடத்துவதால் உங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கு முன்பாக நல்ல விசுவாச முன்மாதிரியைக் காண்பித்து, உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு சந்தோஷம் நல்குகிறீர்களா என்பதை பரிசோதிப்பீர்கள் என நான் நம்பு–கிறேன்.

உண்மையான விசுவாசம் உங்களுக்கு இருக்குமானால், நீங்கள் தேவனுடைய கிருபையின் உதாரணத்தையும் எங்கம் சேவையின் அன்பையும் ஏற்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதால், உங்கள் வெளிச்சத்தால் உங்கள் குடும்பம் மற்றும் வேலை ஸ்தலத்திலுள்ள இருள் அகன்றுப் போய், தேவனுடைய கிருபை வரும். நீங்கள் எல்லா பகுதியிலும் உண்மையுள்ளவர்களாய் இருந்து விசுவாசத்தோடு சேவை செய்யும்போது, தேவன் உங்களது உண்மையின் கனியை உங்களுக்குத் தருவார்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் அனைவரும் தேவனை முழுமையுமாய் நம்பி அனைத்து வார்த்தைகளுக்கும் மகிழ்ச்சியோடு கீழ்ப்படிவீர்கள் என நான் நம்புகிறேன். கூடவே, உங்களது ஒவ்வொரு பகுதிகளிலும் முழுமனதோடு உண்மையுள்ளவர்களாய் இருந்து அபரிதமான ஆவிக்குரிய கனிகளை விளைவிப்பீர்கள் என நான் நம்புகிறேன். இப்படிச் செய்வதால், முடிவு காலத்தில் தேவனுடைய அநாதி திட்டத்தை நிறைவேற்றுகிற இந்த விலையேறப்பெற்ற திருச்சபையில் மாபெரும் கனத்தில் நீங்கள் பங்கடையும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)...” (அப். 17:25)
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)

# 2016 மான்மின் கோடை முகாமின் தடகள விளையாட்டின் MVPகள்



## "நான் மேய்ப்பருடைய ஜெபத்தினால் பிறந்தேன், அந்த கிருபைக்காக நன்றியுடன் நான் ஊக்கமாக ஓடினேன்"

### சகோதரி ஜேயெ லீ,

ஓட்டத்தில் மூன்று மகுடங்கள்

மாகாணம் 31, வயது 14, மான்மின் மத்திய திருச்சபை



2016 தடகள விளையாட்டில், நான் பிள்ளைகள் மற்றும் மாணவி–களுக்கான 100மீட்டர் ஓட்டம், தொலை தூர ஓட்டம் மற்றும் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் பங்கு பெற்றேன். எனக்காக என் தாய் ஒரு வாரத்திற்கு காலை உணவு உபவாசம் ஏறெடுத்–தார்கள்.

நான் கோடை முகாமில் பலமுறை தொலை தூர ஓட்டத்தில் பங்குப் பெற்றிருக்கிறேன். ஆனால் 100 மீட்டர் வேக ஓட்டம் ஓடுவது இதுவே எனக்கு முதல் முறை. மேலும் நான் நிச்சயமில்லாதிருந்தேன். நான் பெரியவர்களுடன் ஓட வேண்டும் என்பதால் நான் அதிக அழுத்தத்தையும்கூட உணர்ந்தேன். எனது மாபெரும் மாகாணப் போதகர், உதவி போதகர் மற்றும் என்னைச் சுற்றியிருந்த மக்கள் அனைவரும் நான் அழுத்தத்தை உணராமல் ஓடும்படி என்னை ஊக்குவித்து எனக்காக ஜெபித்தார்கள்.

மேலும், முகாமிற்கு மூன்று வாரத்திற்கு முன்பே, தலைமை போதகர் என் கனவில் தோன்றி என்னை கட்டித் தழுவினார். அதன் விளைவாக, நான் பந்தயத்திற்கு தைரியத்துடனும், சந்தோஷத்துடனும் ஆயத்தமானேன்.

எனது அம்மா அவர்களது திருமணத்திற்குப் பின்பு இரண்டு ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாதிருந்தார்கள். ஆனால் அவர்கள் மே மாதம் நடைபெற்ற 10வது சிறப்பு எழுப்புதல் கூட்டத்தில் பங்குப்பெற்று தலைமை போதகரது ஜெபத்தைப் பெற்றார்கள். 2002ல் அவர்கள் கருவுற்று, நான் பிறந்தேன். நான் மான்மின் கோடை முகாமின் தடகள விளையாட்டில் மூன்று மகுடங்கள் வென்றேன். நான் மிகவும் சந்தோஷமாகவும் நன்றியுள்ளவளாகவும் உணர்கிறேன். நான் ஆண்டவருக்கும் எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் நன்றி செலுத்துகிறேன்.



## "பேட்மிண்டன் விளையாட்டு வீரராக எனது 23 ஆண்டுகள் மான்மின் தடகள போட்டிக்கு ஆயத்த ஆண்டுகளாக இருந்தன"

### கண்காணி தேசங் கிம்,

பேட்மிண்டன் மற்றும் தொடர் ஓட்டத்தில் இரண்டு மகுடங்கள்

மாகாணம் 12, மான்மின் மத்திய திருச்சபை



நான் பல பேட்மிண்டன் போட்டிகளில் பல தங்கப் பதக்கங்களை வென்றுள்ளேன். ஆனால் உண்மையில் தேவனுக்கு முன்பாக நடத்தப்படுகிற மான்மினின் மகிமையான தடகளப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற விரும்பினேன்.

மான்மினின் தடகளப் போட்டி வெளிப்புறத்தில் நடத்தப்பட்டது. விளையாட்டு வீரர்கள் காற்று, புல் மற்றும் பலவகை மாற்றங்களால் தாக்கப் படுவார்கள் என்பதால் அது பொதுவான அரங்க விளையாட்டுப் போட்டிகளில் இருந்து சற்று வித்தியாசமானதாக இருக்கும். எனது சக வீரருடன் இசைந்து விளையாட நான் தவறினாலோ புதிய சூழலை ஏற்க தவறினாலோ போட்டியில் ஜெயிப்பது என்பது மிக கடினமாகிவிடும். நான் பொருத்தனை ஜெபம் மற்றும் உபவாசத்தை ஏறெடுத்து எல்லாவற்றையும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்தேன். காற்று எங்கள் அணிக்குச் சாதகமாக வீசும்படியாகவும் கூட நான் ஜெபித்தேன்.

எனது அணிக்கும் கிளைசபைகளின் அணிக்கும் கடும்போட்டி நிலவியது. அது போட்டியை 15–15 என்ற இணைப்புக் கொண்டு வந்தது. ஆனால் எதிரணி தவறுகள் செய்ததால், நாங்கள் புள்ளிகளை ஜெயித்தோம். முடிவில், நாங்கள் 21–15 என்று ஜெயித்தோம். 2016ல், பேட்மிண்டன் போட்டி புதிதாக தடகளப் போட்டியில் சேர்க்கப்பட்டது. நாங்கள் முதல் தங்கப் பதக்கத்தை வென்றோம், எங்களது பெண்கள் அணியும் தங்கப்பதக்கம் வென்றது.

நான் தொடர் ஓட்டத்திலும் ஓடினேன். நான் பயிற்சி செய்தபோது, எனது இடது காலில் உள்ள தசை கிழிந்ததுபோல உணர்ந்தேன்; அது சேதமடைந்தது. நான் தேவன் தமது வல்லமையை அனுபவிக்கச் செய்வார் என்றும் விசுவாசத்தில் வளரச் செய்வார் என்றும் நினைத்தேன். அதனால் நான் நன்றியுள்ளவனாய் இருந்தேன். நான் முதல் நாள் இரவு தலைமை போதகருடைய ஜெபத்தை தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் பெற்றேன். அடுத்த நாள், நான் தொடர் ஓட்டப் பந்தயத்தில் ஓடினேன்.

நான் கோலைப் பெற்றவுடன், எனது சரீரம் நான் காயப்படாததுபோல மிக இலகுவானதை உணர்ந்தேன். ஓடும்போது நான் சுகமானேன் என்பதை நிச்சயித்துக் கொண்டேன். நான் எனது இரு கரங்களை உயர்த்தி முடிவு எல்லைக் கோட்டில் நுழைந்து, "அல்லேலூயா! பிதாவே, நன்றி உமக்கு!" என்றேன். என்னைச் சுகமாக்கிய தேவனுக்கும், எனக்காக ஜெபித்த என் தலைமை போதகருக்கும் நன்றி செலுத்துகிறேன்.



## கிளை சபைகளின் அணி கைப்பந்து போட்டியில் தொடர்ந்து நான்கு முறை தங்கப் பதக்கங்களை வென்றது

## "எங்களது வெற்றியின் திறவுகோல்கள் சமாதானமும் கீழ்ப்படிதலுமே"

கிளை சபைகளின் அணியினர் வித்தியாசமான பகுதிகளில் வாழ்கின்றனர்: மாசான், க்வாங்ஜூ, கிழக்கு க்வாங்ஜூ, தேஜீயோன், மிர்யாங், கிம்ஹே மற்றும் சுன்சியோன். அவர்கள் வித்தியாசமான கிளைசபைகளில் பங்குபெறுகின்றனர், வித்தியாசமான வேலைகளை கொண்டுள்ளனர், வயது 23 முதல் 61 வரை வித்தியாசமான வயதுகளாகும். இருப்பினும், கைப்பந்து அணி மான்மின் என்ற பெயரின்கீழ் ஒன்றாக இணைந்து, 2013 முதல் 2016 வரை தொடர்ந்து நான்கு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

எல்லா திசைகளிலுமிருந்து கூடி வருவதற்கு ஐந்து முதல் ஆறு மணி நேரங்கள் எடுக்கும். அவர்கள் சுன்சோன் அல்லது ஹாமானில் சந்திக்க வேண்டியதிருந்தது. அதுதான் க்யோங்சாங் மாகாணம் மற்றும் ஜூயோலா மாகாணத்தின் மையப் பகுதி. அங்கு ஒரு மாதமாக உடற்பயிற்சி மையத்தில் கடுமையான பயிற்சி மேற்கொண்டனர்.

அந்த அணியிலே தங்கள் பள்ளி நாட்களில் கைப்பந்து விளையாட்டு வீரர்களாயிருந்தவர்கள், கைப்பந்து சங்கத்தைச் சேர்ந்த சிலர் மற்றும் கைப்பந்து விளையாட்டு பிடித்தவர்கள் அங்கத்தினர்களாய் இடம்பிடித்திருந்தனர்.

சகோதரர் சுங்ஜின் லீ தற்போது கைப்பந்து பயிற்சியாளராய் உள்ளார். அதனால் அந்த குழு அங்கத்தினர்கள் கைப்பந்தாட்டத்தில் நல்ல திறன்களை கொண்டுள்ளனர். இருப்பினும், ஜெயத்திற்கான திறவுகோல் ஆண்டவருக்கான அவர்களது வாஞ்சையாகும்.

மூப்பர் சுபேக் பார்க், தலைமை பயிற்சியாளர் (வயது 57, க்யோங்நாம் ரிசோர்ஸ் கார்ப்பரேஷன் தலைவர்) சொன்னது, "நாங்கள் கூடிவரும்போது முதலாவது சேர்ந்து ஜெபித்தோம். நாங்கள் இந்தப் போட்டி கிளைசபை அங்கத்தினர்களுக்கு சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியின் ஆதாரமாக வேண்டும் என்றும், மேய்ப்பரின் நறுமணத்தை நாங்கள் தரவேண்டும் என்றும் ஜெபித்தோம். எதிர் அணிக்கு எதிராக எந்த ஒரு அசௌகரிய உணர்வும் கொள்ளக்கூடாதென்றும், நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாதென்றும் எங்கள் மனதை நிர்ணயித்துக் கொண்டோம். கைப்பந்து விளையாட்டில் நல்ல கூட்டு வேலை மிகவும் முக்கியமாகும். மேலும் அணி அங்கத்தினர்கள் நல்ல கூட்டு வேலையை காத்து அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்ட நிலையில், வித்தியாசமான நிலையை விரும்பியிருந்தாலும் கீழ்ப்படிதலோடு மகிழ்ச்சியாக விளையாடினார்கள்."



## ஆச்சரியமான மறுசிருஷ்டிப்பின் கிரியைகள்,
# செவிடான காதுகளை திறந்தது!

அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் அநேக செவிடான மக்கள் தங்களுடைய கேட்கும் திறனை புதுப்பித்துக் கொண்டுள்ளனர். 2015 மான்மின் கோடை முகாமில் பங்குபெற்ற 28 செவிடானவர்களில் 27 பேருடைய காதுகள் திறக்கப்பட்டன. கூடுதலாக, கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக, செவிடர்களின் செவிகளை திறக்கும் கிரியைகளும் நடைபெற்று கொண்டு வருகின்றன.

2016 மான்மின் கோடை முகாமில், பிரான்ஸ், ஜெர்மனி, ஃபாரே தீவுகள், டென்மார்க், இந்தியா, மலேசியா மற்றும் தாய்லாந்திலிருந்து 29 செவிடர்கள் வந்திருந்தனர். அவர்கள் காலை ஒருவேளை உபவாசத்தை நாற்பது நாட்களாக ஏறெடுத்து, அநுதினம் இரவும் தானியேல் ஜெபக்கூடுகையில் பங்குப்பெற்று, இந்த முகாமிற்காக தங்களை ஆயத்தப் படுத்தினர்.

முதல் நாள் இரவில் நடைபெற்ற தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் அவர்கள் அறிவர். லீ அவர்களின் வியாதியஸ்தர் களுக்கான ஜெபத்தைப் பெற்றனர். ஜெப வேளையில் சிலர் அக்கினியை உணர்ந்தனர், சிலர் குளிரை உணர்ந்தனர் மற்றும் சிலர் மின்சார அதிர்வைப் போன்றும் உணர்ந்தனர். அதன்பிறகு அவர்கள் கேட்கத் துவங்கினர்; அவர்களில் சிலர் அதிக தெளிவாக கேட்கத் துவங்கியுள்ளனர்.

மலேசியாவிலிருந்து வந்த 23 வயதான சகோதரர் லியு கர் லூக், 2015 மான்மின் கோடை முகாம் மூலமாக சற்று கேட்கத் துவங்கினார். ஆனால் இந்த வருட முகாமில் அவர் தன்னுடைய இரண்டு காதுகளிலும் நன்றாக கேட்கத் துவங்கியிருக்கிறார்; பேசவும் ஆரம்பித்துள்ளார். மலேசிய சீனர் கண்காணியை லீ யிங், வயது 50, கடந்த வருடத்தில் அவளுடைய வலது காது செவிட்டுத்தன்மையிலிருந்து சுகமானாள். இந்த வருடத்திலும் அவள் அதிக ஒலிகளை கேட்கத் துவங்கி இருக்கிறாள்.

ஜெர்மனியிலிருந்து வந்த சகோதரி பேட்டே கெய்ஷெல்சோய்டர், வயது 47, அவளுடைய இரண்டு காதுகளிலும் அக்கினியை உணர்ந்து, கேட்கத் துவங்கினாள். மேலும் தைராய்டு அறுவை சிகிச்சையின் பின் விளைவுகளிலிருந்தும் சுகமானாள்.

ஃபாரே தீவுகளிலிருந்து வந்த 31 வயதாகும் சகோதரர் ஹான் வெய்யி ஹான்சன், கடந்த வருட முகாமில் அவரின் இடது காது திறவுண்ட கிரியையை அனுபவித்தார். இந்த வருடத்தில், அவர் தன் இடது காதால் நன்றாக கேட்கிறார், அவருடைய வலது காது வழியாகவும் கேட்க துவங்கியுள்ளார். இந்தியாவிலிருந்து வந்த 44 வயதாகும் சகோதரர் உமேஷ் க்ரோவர் மற்றும் பிரான்சிலிருந்து வந்த 48 வயதாகும் சகோதரர் பாஸ்கல் பவ்லிக்வ்வோஸ்கி இருவரும் வலது காது வழியாக கேட்கத் துவங்கியிருக்கின்றனர்.

டென்மார்க்கிலிருந்து வந்த சகோதரி ஜூட்டே தாகுல், 58; தாய்லாந்திலிருந்து வந்த சகோதரர் சிவ்வாபொங் தாஷா, 24; மலேசியாவிலிருந்த வந்திருந்த சகோதரர் பிரிசன் தாஸ் பாஸ்கரதாஸ், 28, சகோதரர் லியு கர் பொவுண்ட், 23, சகோதரர் ஓய்ஹாங் ஹொய், 38, சகோதரர் ச்சாஷோ பெங், 49, சகோதரர் ஃபொலுன் லியோங், 23, சகோதரி லிம் சூன் சியோங், 21 போன்றோரும் இந்த வருட முகாமில் தங்களுடைய கேட்கும் திறன் அதிகரித்ததை அனுபவித்தனர்.

கொரியாவில் உள்ள அங்கத்தினர்களில், 47 வயதான கண்காணியை ஹெய்ஜின் சோ, தன் காதுகேள் கருவியில்லாமல் வலது காது வழியாக கேட்கத் துவங்கியுள்ளார்; அவளின் உச்சரிப்பும் தெளிவாக மாறியுள்ளது. கண்காணியை யங்சுக் சா, வயது 67, தன் இரு காதுகளிலும் கேட்கத் துவங்கியுள்ளார். கடந்த முகாமில் கேட்கத் துவங்கிய கண்காணியை ஜங்சுக் லீயும் (45), மியோக் ச்சியோங்–கும் (48) தற்பொழுது அதிக ஒலிகளை மிகவும் தெளிவாக கேட்கத் துவங்கி உள்ளனர்.

# “நாங்கள் மான்மினை சந்தித்தப் பிறகு தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பி வழிகின்றது”



### சகோதரர் அன்டோன் தேகு சிஷே, வயது 41, கஹார்க்வி, உக்ரைன்

என் மனைவி ஏஞ்சலாவும் நானும் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்களை TBN ரஷ்யா மூலமாக அறிந்துகொள்ள முடிந்தது. நாங்கள் மான்மின் மத்திய சபையின் www.manmin.org என்ற இணையதளத்தில் அவருடைய பிரசங்கங்களை தொடர்ச்சியாக கேட்டு வந்தோம். அதன்மூலம் தேவனுடைய சித்தத்தையும் இருதயத்தையும் பின்பற்றி வாழ முயற்சித்தோம். நான் செவ்வையான பாதையில் நடந்ததால், என் தொழில் செழித்தோங்கியது; பொருளாதார ஆசீர்வாதமும் எனக்கு வந்தது.

என்னுடைய குடும்பத்திலுள்ள எட்டு பேரும் ஜெபித்து, அநுதினமும் காலையில் பரிசுத்த வேதாகமத்தில் ஒரு அதிகாரத்தை வாசித்து, ஒரு வசனத்தை மனப்பாடம் செய்கிறோம். என்னுடைய ஆறு வயது மகளை தவிர்த்து என் மற்றொரு மகளோடு நாங்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாள் உபவாசத்தை ஏறெடுக்கிறோம். இதைச் செய்வதின்மூலம், தேவனுடைய அன்பை நாங்கள் அனுபவிக்கின்றோம்.

என்னுடைய மகன் பிலிப் பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியல் படிக்கின்றான். உக்ரைனிலிருந்து அமெரிக்காவிற்குச் செல்ல விசாவைப் பெறுவது கடினமான காரியமானாலும், அவனுக்கு சமீபத்தில் விசா கொடுக்கப்பட்டது. என் மகள் சூசன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிக்கிறாள். அறிவர். லீ அவர்களின் “நன்றாகப் படிப்பதற்கான திறவுகோல்” என்ற பிரசங்கத்தைக் கேட்டு என் மகள் படித்ததால், அவள் உதவித்தொகை பெறும் மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

என் குடும்பமானது தேவனை அனைத்திலும் முதலாவதாக நேசிக்கும்படி முயற்சி செய்து கொண்டு வருகிறது. மேலும் மிக அழகான பரலோக வாசஸ்தலமாகிய புதிய எருசலேமிற்கான நம்பிக்கையோடு சத்தியத்தின்படி செயல்படுகிறது. இதற்கிடையில், என் மனைவியும் நானும் ஒரு வருடமாக வாஞ்சையோடு 2016 மான்மின் கோடை முகாமிற்காக ஆயத்தப்பட்டோம். நாங்கள் கொரியாவிற்காக பயணப்பட்டபொழுதே தேவனுடைய மாட்சிமையான அன்பை உணர்ந்தோம்.

நாங்கள் உக்ரைனிலிருந்து கொரியாவிற்கு துபாய் மார்க்கமாக செல்ல வேண்டும். நாங்கள் துபாய் விமானநிலையத்தில் புறப்படலாம் என்று தீர்மானித்திருந்த அந்த நாளில் பெரும் விபத்து ஒன்று நடந்தது. ஆனால் நாங்கள் திட்டமிட்ட நாளுக்கு முன்பே புறப்படும்படி தேவன் எங்களை நடத்தினார். எனவே எந்தவித பிரச்சனையுமின்றி நாங்கள் கொரியாவில் சென்று இறங்கினோம், கோடை முகாமில் பங்குபெற்றோம்.

ஆகஸ்டு 2ம் தேதி உக்ரைனிலிருந்து புறப்பட்ட நாங்கள் ஆகஸ்டு 3ம் தேதி கொரியாவில் வந்து இறங்கினோம். ஆகஸ்டு 3ம் தேதி துபாய் விமானநிலையம் முடங்கியது. உக்ரைனிலிருந்து துபாய்க்கு போகவேண்டிய அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. நான் முன்பே வந்த விமானமும் துபாய்க்கு திரும்பிப் போகவில்லை. ஒரு நாள் தாமதமாக நாங்கள் புறப்பட்டிருந்தால், முகாமில் எங்களால் பங்குப்பெற்றிருக்கவே முடியாது.

இந்த முகாமில் நான் கிருபையினாலும் உணர்வினாலும் நிரப்பப்பட்டேன். தேசமெங்கிலும் மிகுந்த உஷ்ணம் இருந்தபோதிலும், முகாம் நடைபெற்ற இடம் குளுமையாக இருந்தது. வானம் மேகங்களினால் மூடப்பட்டிருந்தது, குளிர் காற்று வீசியது; என்னுடைய தோள்பட்டையிலும் விரல்களிலும் தட்டாம்பூச்சிகள் வந்து அமர்ந்தன. மேலும் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் வியாதிகளிலிருந்து சுகமானார்கள். இந்த அனைத்து வல்லமையான கிரியைகளை கண்டபொழுது என்னால் பரிசுத்தமாக முடியும் என்ற விசுவாசம் எனக்கு அருளப்பட்டது.

தடகளப் போட்களும் உகந்த தட்பவெட்பநிலையில் நடந்தது. அந்நிகழ்ச்சி மான்மினின் ஒற்றுமையை உணரச் செய்தது. அக்கினி முகாம் துதி ஆராதனையில், நான் தேவனுடைய, கர்த்தருடைய மற்றும் மேய்ப்பருடைய அன்பினால் நிரப்பப்பட்டேன். மேலும் பரலோகத்திற்கான அதிக நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டேன். கடைசி நாள் பயணத்தில் மூவான் மதுர தண்ணீர் இடத்திற்குச் சென்றபொழுது நான் எண்ணற்ற தேவதூதர்களையும், தங்க ஒளியையும் பார்த்தேன். நானும் என் மனைவியும் மூவான் மதுர தண்ணீரில் மூழ்கி எழுந்த பிறகு, நான் இரத்த ஓட்டக் கோளாறிலிருந்தும், என் மனைவி சுருள்சிரை நாளத்திலிருந்தும் சுகமானோம். அல்லேலூயா!

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com